## மார்ச் - 16 - வியாழன்

**புனித ஆபிரகாம்**

**"ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்றோர்" (எரே.17:7)**

---

### முதல் வாசகம் : ஏரேமியா 17 : 5 - 10

ஆண்டவர் கூறுவது இதுவே மனிதரில் நம்பிக்கை வைப்போரும் வலுவற்ற மனிதரில் தம் வலிமையைக் காண்போரும் சபிக்கப்படுவர். அவர்கள் பாலைநிலத்துப் புதர்ச்செடிக்கு ஒப்பாவர். பருவ காலத்திலும் அவர்கள் பயனடையார் பாலை நிலத்தின் வறண்ட பகுதிகளிலும் யாரும் வாழா உவர் நிலத்திலுமே அவர்கள் குடியிருப்பர். ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்றோர் ஆண்டவரே அவர்களது நம்பிக்கை. அவர்கள் நீர் அருகில் நடப்பட்ட மரத்துக்கு ஒப்பாவர். அது நீரோடையை நோக்கி வேர் விடுகின்றது. வெப்பமிகு நேரத்தில் அதற்கு அச்சமில்லை. அதன் இலைகள் பசுமையாய் இருக்கும். வறட்சிமிகு ஆண்டிலும் அதற்குக் கவலை இராது. அது எப்போதும் கனி கொடுக்கும். இதயமே அனைத்திலும் வஞ்சகம் மிக்கது. அதனை நலமாக்க முடியாது. அதனை யார்தான் புரிந்து கொள்வர்? ஆண்டவராகிய நானே இதயச் சிந்தனைகளை ஆய்பவர். உள்ளுணர்வுகளைச் சோதித்து அறிபவர். ஒவ்வொரு வரின் வழிகளுக்கும் செயல்களின் விளைவுக்கும் ஏற்றவாறு நடத்துபவர்.

**பதில்பாடல் :** ஆண்டவர்மீது நம்பிக்கை கொண்டவரே பேறுபெற்றோர்

### நற்செய்தி : லூக்கா 16 : 19 – 31

அக்காலத்தில் செல்வர் ஒருவர் இருந்தார். அவர் விலையுயர்ந்த மெல்லிய செந்நிற ஆடை அணிந்து நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்தார். இலாசர் என்னும் பெயர் கொண்ட ஏழை ஒருவரும் இருந்தார். அவர் உடல் முழுவதும் புண்ணாய் இருந்தது. அவர் அச்செல்வருடைய வீட்டு வாயில் அருகே கிடந்தார். அவர் செல்வருடைய மேசையிலிருந்து விழும் துண்டுகளால் தம் பசியாற்ற விரும்பினார். நாய்கள் வந்து அவர் புண்களை நக்கும். அந்த ஏழை இறந்தார். வானதூதர்கள் அவரை ஆபிரகாமின் மடியில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். செல்வரும் இறந்தார். அவர் அடக்கம் செய்யப்பட்டார். அவர் பாதாளத்தில் வதைக்கப்பட்டபோது அண்ணாந்து பார்த்துத் தொலையில் ஆபிரகாமையும் அவரது மடியில் இலாசரையும் கண்டார். அவர், "தந்தை ஆபிரகாமே, எனக்கு இரங்கும் இலாசர் தமது விரல் நுனியைத் தண்ணீரில் நனைத்து எனது நாவைக் குளிரச்செய்ய அவரை அனுப்பும். ஏனெனில் இந்தத் தீப்பிழம்பில் நான் மிகுந்த வேதனைப்படுகிறேன்" என்று உரக்கக் கூறினார். அதற்கு ஆபிரகாம், "மகனே, நீ உன் வாழ்நாளில் நலன்களையே பெற்றாய் அதே வேளையில் இலாசர் இன்னல்களையே அடைந்தார். அதை நினைத்துக் கொள். இப்பொழுது அவர் இங்கே ஆறுதல் பெறுகிறார் நீயோ மிகுந்த வேதனைப்படுகிறாய். அன்றியும் எங்களுக்கும் உங்களுக்கும் இடையே பெரும் பிளவு ஒன்று உள்ளது. ஆகையால் இங்கிருந்து ஒருவர் உங்களிடம் வர விரும்பினாலும் கடந்து வர இயலாது. அங்கிருந்து நீங்கள் எங்களிடம் கடந்து வரவும் இயலாது" என்றார். "அவர், "அப்படியானால் தந்தையே, அவரை என் தந்தை வீட்டுக்கு அனுப்புமாறு உம்மிடம் வேண்டுகிறேன். எனக்கு ஐந்து சகோதரர்கள் உண்டு. அவர்களும் வேதனை மிகுந்த இந்த இடத்திற்கு வராதவாறு அவர் அவர்களை எச்சரிக்கலாமே" என்றார். அதற்கு ஆபிரகாம், "மோசேயும் இறைவாக்கினர்களும் அவர்களுக்கு உண்டு. அவர்களுக்குச் செவிசாய்க்கட்டும்" என்றார்.- அவர், "அப்படியல்ல, தந்தை ஆபிரகாமே, இறந்த ஒருவர் அவர்களிடம் போனால் அவர்கள் மனம் மாறுவார்கள்" என்றார். ஆபிரகாம், "அவர்கள் மோசேக்கும் இறைவாக்கினருக்கும் செவிசாய்க்காவிட்டால், இறந்த ஒருவர் உயிர்த்தெழுந்து அவர்களிடம் போனாலும் நம்பமாட்டார்கள்" என்றார்.

**தியானம்:** கடவுளை மறந்து கடவுள் என்றால் யார்? என்று கேட்கின்ற இன்றைய கலாச்சார சீரழிவுகள் நிறைந்த உலகிலே வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மை, சற்றே நின்று சிந்திக்க இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் அழைப்பு விடுக்கின்றது. பலவிதமான வாழ்க்கைப் போராட்டங்கள் அவற்றால் ஏற்படும் மனத்தாங்கள் அவற்றிற்கு என்ன காரணம்? என்கின்றது இன்றைய முதல் வாசகம். கடவுளைப் புறக்கணித்தவரைப்பற்றிய கதையை இன்றைய நற்செய்தி தெளிவுபடுத்துகின்றது. செல்வம் மனிதனை தனது ஆதிக்கத்துக்குட்படுத்தி விடுகின்றது. அதனால் வாய்ப்போ வசதியோ அற்றவர்கள் துன்பப்பட நேரிடுகின்றது. செல்வந்தராயிருப்பது பாவமல்ல ஆனால் நமக்கு அடுத்திருப்பவர் பட்டினியாய் இருக்கும் பொழுது அவர்களைக் கண்டு கொள்ளாதிருப்பதே பாவம். அங்கே செல்வந்தன் செய்த பாவம் தனது வீட்டு வாசலருகில் பசியோடிருந்த லாசரைக் கண்டும் காணாதவரைப் போன்று இருந்தது தான் ஆம் நமது வாழ்விலும் நாம் கடவுளின் இதயத்தில் இடம்பிடிக்க வேண்டுமாயின் பிறரின் தேவை அறிந்து உதவுதான் ஒரேவழி.